பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

01 06 2025 **SUNDAY** 12 40**PM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பாதுகாப்புத் தளவாடங்கள் கொள்முதல் நடைமுறையை எளிமையாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- மாநிலத்தின் முன்னேற்றத்திற்காக தமிழக அரசு, மத்திய அரசுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று மகாராஷ்ட்டிர ஆளுநர் திரு. சிபி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.
- மாநிலங்களவை தேர்தலில் அஇஅதிமுக சார்பில் திரு. இன்பதுரை, திரு. தனபால் போட்டியிடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- ரஷ்யாவில் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் ஓட்டுநர் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்தனர்
- நார்வே செஸ் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் **Koneru Humpy,** 8 புள்ளி ஐந்து புள்ளிகளுடன் முன்னிலை பெற்றுள்ளார்.

>>>>><<<<<

பாதுகாப்பு படைகளுக்கான ஆயுத கொள்முதல் நடைமுறையை எளிமையாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான செயலாளர் திரு. ராஜேஷ்குமார் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் மாநாடு ஒன்றில் பேசிய அவர், ஆயுதப் படைகளை நவீனமயமாக்குவதற்கான பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளது என்றார்.

பொதுத்துறை மற்றும் தனியார் துறையினரிடமிருந்து ஆயுதங்களை கொள்முதல் செய்யும் வகையில் கொள்முதல் நடைமுறைகளை மாற்றியமைக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நடைமுறை ஏற்கனவே கப்பல் கட்டும் தொழிலில் பின்பற்றப்பட்டு வரும் நிலையில், அண்மையில் போர் விமான கொள்முதலிலும் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக திரு. ராஜேஷ்குமார் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

பொக்ரான் உள்ளிட்ட நாட்டின் முக்கிய இடங்களில் அடுத்த தலைமுறை பாதுகாப்பு தொழில்நுட்ப ஒத்திகையை ராணுவம் மேற்கொண்டுள்ளது.

பொக்ரான் மற்றும் **Babina-**வில் உள்ள துப்பாக்கிச் சுடும் பயிற்சி தலங்கள் மற்றும் ஜோஷிமத்-தில் இந்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தப் பயிற்சியில் வான் சோதனைகள், ஆக்ரா மற்றும் கோபால்பூரில் நடைபெறவுள்ளது.

சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட துல்லிய தொழில்நுட்பங்களை கொண்ட பாதுகாப்புத் தளவாடங்களின் செயல்பாட்டை ஆராயும் வகையிலும் மின்னணு போர் நுட்பங்களை ஒருங்கிணைக்கும் வகையிலும் இந்தப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்தியா – மங்கோலியா இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி மங்கோலியாவின் **Ullanbaatar-**ல் தொடங்கியுள்ளது.

நாடோடி யானை என்று பெயரிடப்பட்டுள்ள இந்த பயிற்சி, இம்மாதம் 13ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

ஊடுருவல் மற்றும் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து பயிற்சி மேற்கொள்வதுடன், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் போர் உத்திகளை இருநாட்டு ராணுவமும் பரிமாறிக் கொள்ளவுள்ளதாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

>>>>><<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து உலக நாடுகளுக்கு எடுத்துரைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவினர் பல்வேறு நாடுகளுக்கும் சென்று இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விளக்கம் அளித்து வருகின்றனர்.

லண்டன் சென்றுள்ள பிஜேபி உறுப்பினர் திரு. ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழுவினர், அந்நாட்டு மக்கள் சபையின் தலைவர் **Lindsay Hoyle,** இந்தோ-பசிபிக் விவகாரங்களுக்கான அமைச்சர் உள்ளிட்டோரை சந்திக்கவுள்ளனர்.

ஐக்கிய ஜனதா தள உறுப்பினர் திரு. சஞ்சய்குமார் ஜா தலைமையிலான குழுவினர், தங்களது இந்தோனேஷிய பயணத்தை முடித்துக் கொண்டு மலேசிய தலைநகர் கோலாலம்பூர் சென்றுள்ளனர்.

இதுதொடர்பாக மலேசியாவுக்கான இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இந்திய தூதுக்குழுவினர் - மலேசிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினரை சந்திக்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திமுக உறுப்பினர் திருமதி. கனிமொழி தலைமையிலான குழுவினர் ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட் சென்றடைந்துள்ளனர்.

இவர்கள், அந்நாட்டு அரசின் அமைச்சர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினருடன் ஆலோசனை நடத்தவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, சிவசேனா உறுப்பினர் திரு. ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான குழுவினர், லைபீரியா நாட்டின் மன்ரோவியா சென்றுள்ளனர்.

இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருக்கும் அக்குழுவினர் லைபீரிய அதிபர், அந்நாட்டு நாடாளுமன்ற அவைத்தலைவர், செனட் சபையின் தலைவர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சரை சந்திக்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் உறுப்பினர் திரு. சசிதரூர் தலைமையிலான மற்றொரு குழுவினர் பிரேஸில் நாட்டின் பிரெஸீலியா சென்றுள்ளனர்.

இதுகுறித்து திரு. சசிதரூர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தமது குழுவினர் பயணம் மேற்கொண்ட நாடுகளில் ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு முழுமையான ஆதரவு தெரிவிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

>>>>><<<<<

பிரேஸில் நாட்டில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் சுற்றுலாத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் தாம் கலந்துகொள்ளவிருப்பதாக மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

பிரேஸில் செல்லும் வழியில் லண்டனில், இந்திய வம்சாவளியினரை சந்திக்கவிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

குறிப்பாக, ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவர்களுடன் சுற்றுலா தொழிலை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கவிருப்பதாகவும் திரு. ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக மாநில அரசு, மத்திய அரசுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று மகாராஷ்ட்டிர ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசு தமிழகத்திற்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து வருவதாக கூறினார்.

மாநிலத்தில் வன்முறை சம்பவங்களை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு இம்மாதம் 19ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலில் அஇஅதிமுக சார்பில் வழக்கறிஞர் திரு. இன்பதுரை மற்றும் அக்கட்சியின் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் திரு. தனபால் ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அஇஅதிமுக துணை பொதுச்செயலாளர் திரு. கே.பி. முனுசாமி, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மாநிலங்களவை தேர்தலில் தேமுதிக-வுக்கு ஒரு இடம் ஒதுக்கப்படும் என்றார்.

தேமுதிக, அஇஅதிமுக கூட்டணியில் தொடரும் என்றும் திரு. கே.பி. முனுசாமி தெரிவித்தார்.

>>>>><<<<<

வடகிழக்கு மாநிலங்களில் இன்று கன முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, ஹிமாச்சலப்ரதேசம், உத்ராகண்ட், பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் அடுத்த 3 நாட்களுக்கு இடியுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா, கர்நாடகா, மாஹோ மற்றும் ஆந்திரப்பிரதேசத்தில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக, கர்நாடக மாநிலம் கபினி அணையிலிருந்து காவிரி ஆற்றில் வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு நீரின் அளவு வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

தமிழகத்தின் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழையின் அளவு குறைந்து, குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு தணிந்துள்ளதால், ஏழு நாட்களுக்குப் பிறகு சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செந்தில் 30 செகண்ட்ஸ்)

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் அதிகரித்திருப்பதை அடுத்து, தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு பகுதி முதல்போக பாசனத்திற்காக அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜ்குமார் 45 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

ஜம்மு கஷ்மீரின் ஸ்ரீநகர் - லே நெடுஞ்சாலையில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, **Zojila** கணவாய் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தப் பனிப்பொழிவு காரணமாக, உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று, சிக்கிம் மாநிலத்தின் பெய்யும் கனமழை காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, சாலைகள் அடித்துச் செல்லப்பட்டதால், அம்மாநிலத்தின் வடக்கு பகுதியில் சுமார் 800க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் சிக்கியுள்ளனர். இவர்களை பாதுகாப்பாக அழைத்து வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**>>>>><<<<<**

ரஷ்யாவில் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் ஒட்டுநர் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்தனர்.

அந்நாட்டின் மாஸ்கோவிலிருந்து **Klimov** நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்த ரயில், மேற்கு **Bryansk** பகுதியில் சென்றபோது தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

பாலம் ஒன்று இடிந்து விழுந்ததே இந்த விபத்துக்கு காரணம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

**>>>>><<<<<**

நார்வே செஸ் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் **Koneru Humpy,** 8 புள்ளி ஐந்து புள்ளிகளுடன் முன்னிலை பெற்றுள்ளார்.

மற்றொரு இந்திய வீராங்கனையாக வைஷாலி 6 புள்ளி ஐந்து புள்ளிகளுடன் நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் பிரிவின் ஐந்தாவது சுற்று முடிவில் அர்ஜுன் எரிகேஸி நான்காவது இடத்தில் உள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் மும்பை இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இப்போட்டி, இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது

**>>>>>END<<<<<**